பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 10 2026 SATURDAY  7 15  AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளரிளம் பெண்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் சுகாதாரத்துறையினர் அக்கறை செலுத்துவது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. வளர்ந்து வரும் நாடுகளின் தேவைகளை உலகிற்கு எடுத்துரைக்க இந்தியாவும், ஆப்பிரிக்க நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்களை நீக்குவதற்கான படிவம்-7 தொடர்பாக தேர்தல் ஆணையம் வரம்புகளை நிர்ணயித்துள்ளது.

4. இயற்கை மற்றும் சாகச சுற்றுலாவுக்கு புகழ்பெற்ற மாநிலமாக அருணாச்சலப்பிரதேசம் திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

5. ஜந்தர் மந்தரில் எந்தவொரு போராட்டத்திற்கும் அனுமதி இல்லை என்று தில்லி காவல்துறை அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<

வளரிளம் பெண்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் சுகாதாரத்துறையினர் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் சார்பில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் நேற்று உரையாற்றிய அவர், வளரிளம் பெண்களின் உடல்நலம், ஊட்டச்சத்து ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அங்கன்வாடி மையங்களை மேம்படுத்தி, சமூக பங்கேற்பு மையங்களாக மாற்ற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

அங்கன்வாடி மையங்களை சுற்றியுள்ள குடும்பங்கள் சிறப்பு நிகழ்வுகளின் போது, குழந்தைகளுக்கு சத்தான உணவுகளையும், விளையாட்டு பொருட்களையும் வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்றுவதில் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அவசியம் என்றும் அவர் கூறினார்.

பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் அதிகாரமளித்தல் தொடர்பான பாடத்திட்டங்களை உருவாக்குமாறு கல்வியாளர்களை பிரதமர் கேட்டுக் கொண்டார்.

ஆரோக்கியமும், ஊட்டச்சத்தும் தூய்மையிலிருந்து தொடங்குவதால், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை நாடுமுழுவதும் தூய்மை இயக்கத்தை தீவிரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<

வளர்ந்து வரும் நாடுகளின் தேவைகளை உலகிற்கு எடுத்துரைக்க இந்தியாவும், ஆப்பிரிக்க நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

எத்தியோப்பியாவில் பயணம் மேற்கொண்டுள்ள அவர், தலைநகர் அடிஸ் அபாபா-வில் அந்நாட்டின் பிரதமர் திரு. Abiy Ahmed Ali-யை சந்தித்து பேசினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தனிப்பட்ட வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட டாக்டர் ஜெய்சங்கர், இந்தியா – எத்தியோப்பியா இடையே பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு சமீபத்திய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்று கூறினார்.

இது, இருநாடுகளுக்கும் பயனளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பின்னர், நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய டாக்டர் ஜெய்சங்கர், வளரும் நாடுகள் தற்போது சந்திக்கும் நெருக்கடிகளை எடுத்துரைத்தார்.

இந்த நாடுகளின் கோரிக்கைகளை சர்வதேச சமூகம் புறக்கணிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள், உணவு, உரம், நிதி ஆகிய நான்கு நெருக்கடிகள் முக்கியமானவை என்றும் அவர் கூறினார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் மோதல்களும், கோவிட் பெருந்தொற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளை பாதித்துள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<

வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்களை நீக்குவதற்கான படிவம்-7 தொடர்பாக தேர்தல் ஆணையம் வரம்புகளை நிர்ணயித்துள்ளது.

இதன்படி, அதிகபட்சமாக ஒருவர் பத்து விண்ணப்பங்களும், வாக்காளர் பட்டியல் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படும்போது மாதத்திற்கு ஐந்து விண்ணப்பங்களும் தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படிவம் 7 விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கான நியாயமான வரம்புகளை நிர்ணயிப்பது தொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மொத்தமாக ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதை தடுக்கும் நோக்கத்தோடு, நேரடியாகவும் இணையம் வழியாகவும் படிவத்தை தாக்கல் செய்வதற்கான வரம்பையும் தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ளது.

பெயரை நீக்கக் கோரும் விண்ணப்பங்களை அந்த தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள நபரால் மட்டுமே தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபோன்ற விண்ணப்பங்களை தேர்தல் அலுவலர்கள் ஆய்வு செய்யும்போது, புகார் பொய்யானது அல்லது புனையப்பட்டது என்று கண்டறிந்தால், விண்ணப்பதாரர் மீது நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

>>>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஜார்க்கண்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

இன்று காலை தியோகரில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று அவர் உரையாற்றுகிறார்.

பின்னர், அங்குள்ள ராணுவ மருத்துவமனை வளாகத்தில் ராணுவ மக்கள் தொடர்பு விழாவிலும் அவர் பங்கேற்கிறார்.

குடியரசு துணைத்தலைவரின் வருகையை முன்னிட்டு தியோகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<

நாட்டில் தேர்தலை வாக்குச் சீட்டு அடிப்படையில் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணையம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மனுவை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு-வை நேற்று சந்தித்து அவர்கள் வழங்கினர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை என்று கூறினார்.

இதுதொடர்பாக வாக்காளர்கள் அளித்துள்ள புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று குடியரசுத் தலைவரிடம் தாம் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை திரும்பப் பெற்று வருங்காலத்தில் வாக்குச் சீட்டு அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாங்கள் தெரிவித்த புகார் தொடர்பான ஆதாரங்களை குடியரசுத்தலைவர் கோரியுள்ளதாகவும், அவற்றை விரைவில் தாக்கல் செய்யப் போவதாகவும் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

குடியரசுத்தலைவரை சந்தித்த எதிர்க்கட்சி தலைவர்கள் அடங்கிய குழுவில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, திரிணமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, இடதுசாரி கட்சித் தலைவர்கள் திரு. பேபி, திரு. ராஜா, தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. சுப்ரியா சுலே உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

>>>>>>><<<<<

ஜந்தர் மந்தரில் எந்தவொரு போராட்டத்திற்கும் அனுமதி இல்லை என்று தில்லி காவல்துறை அறிவித்துள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற போராட்டங்களின் போது, வன்முறைகள் ஏற்பட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்கள் ஜந்தர் மந்தர் நோக்கி வருவதை தடுக்கும் வகையில், ரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

இந்நிலையில் தலைநகர் தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதான சாலைகளில் காவல்துறையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, தில்லி – நொய்டா நெடுஞ்சாலை உட்பட முக்கியமான இடங்களில் வாகன தணிக்கை நடைபெற்று வருகிறது.

தில்லி – ஹரியானா, தில்லி – உத்தரபிரதேசம் எல்லைப்பகுதிகளிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் காவல்துறையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<

இயற்கை மற்றும் சாகச சுற்றுலாவுக்கு புகழ்பெற்ற மாநிலமாக அருணாச்சலப்பிரதேசம் திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

அருணாச்சலப்பிரதேசம் தொடர்பான புத்தகத்தை புதுதில்லியில் நேற்று வெளியிட்டுப் பேசிய அவர், அம்மாநிலத்தின் பாரம்பரிய கலாச்சாரம், இயற்கை சூழலை பாதுகாப்பதாக கூறினார்.

அம்மாநிலத்தில் சுற்றுலா, உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமாக உள்நாடு மட்டுமல்லாமல் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையை மேலும் அதிகரிக்க முடியும் என்று தெரிவித்தார்.

இயற்கை சுற்றுலா மற்றும் மலையேற்றம் போன்ற சாகச நடவடிக்கைகள் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு அனுபவங்களை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொலைதூரப் பகுதிகளிலும் அழகிய சுற்றுலா தலங்கள் உள்ளதாகவும், போக்குவரத்து இணைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமாக அந்தப் பகுதிகள் பிரபலமடைவதோடு, உள்ளூர் மக்களின் வாழ்வாதாரமும் மேம்படும் என்று திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

>>>>>>><<<<<

ரயில் பயணிகளின் வசதிகளுக்காக ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், ரயில் நிலையங்கள் சீரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் வேலூர் கண்டோன்மண்ட் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் 53 செகண்ட்ஸ்)

ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று பயணிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயணிகள் 32 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 249 ரன் எடுத்தது.

250 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய வெஸ்ட் இண்டீஸ், 18 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 252 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

>>>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று கோவா அணியை எதிர்கொள்கிறது.

கோவாவில் இப்போட்டி இரவு மணி 7.30 மணிக்கு தொடங்கவுள்ளது.

மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - தில்லி அணியை எதிர்த்து விளையாடவுள்ளது.

>>>>>>end<<<<<